வடசென்னை வளர்ச்சித் திட்டப் பணிகள் !

முதல் பக்கத் தொடர்ச்சி

அதனைத் தொடர்ந்து, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் சென்னை, வில்லிவாக்கம், பாடி மேம்பாலத்தின்கீழ், சிவ சக்தி காலனியில் சுமார் 3.93 ஏக்கர் பரப்பளவில் 53.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 1,25,402 சதுர அடி கட்டடப் பரப்பளவில் தரை தளத்தில் 64 கடைகளும், அலுவலக அறையும், இரு மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடமும், முதல் தளத்தில் 70 கடைகளும் இரண்டாம் தளத்தில் உணவு விடுதி வளாகம் உட்பட 54 கடைகளும், முற்றத்தில் மீன் வள அமைப்புகள் என மொத்தம் 188 கடைகளுடன் அமைக்கப்படவுள்ள சர்வதேச தரத்திலான கொளத்தூர் வண்ண மீன்கள் வர்த்தக மையம்;

சென்னை, இராயபுரம் மூலகொத்தலத்தில் சுமார் 0.67 ஏக்கர் பரப்பளவில் 14.31 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 41,593 சதுர அடி கட்டட பரப்பளவில் அடித்தளம் மற்றும் இரண்டு தளங்களுடன் கூடிய சமுதாய நலக்கூடம்;

சென்னை, புரசைவாக்கம், கான்ரான் ஸ்மித் சாலையில் சுமார் 1.04 ஏக்கர் பரப்பளவில் 11.43 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 45,198 சதுர அடி கட்டடப் பரப்பளவில் தரைதளத்தில் சலவைக் கூடங்கள், இயந்திரக் கூடங்கள், துவைக்கும் கூடங்கள், உலர்த்தும் இயந்திரங்கள் மற்றும் துணி தேய்க்கும் இடம், இரு மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடமும், முதல் தளத்தில் துணி உலர்த்தும் இடம், என 60 அறைகள் கொண்ட நவீன சலவைக்கூடம்;

புழல் ஏரிக்கரையில் சுமார் 8.17 ஏக்கர் பரப்பளவில் 16.96 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபாதை, இயற்கைக் காட்சி அமைப்புடன் கூடிய உயர்மட்ட நடைபாதை, மியாவாக்கி காடு வளர்ப்பு, குழந்தைகளுக்கான கண் காட்சி இடம், இயற்கை குளம், குடிநீர் மற்றும் நவீன கழிப்பறை போன்ற அனைத்து வசதிகளுடன் மேம்படுத்தப்படவுள்ள புழல் ஏரிக்கரை;

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.8.2024) வடசென்னை வளர்ச்சித் திட்ட விரிவாக்கப் பணிகளின் கீழ், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் சென்னை, வில்லிவாக்கம், பாடி மேம்பாலத்தின்கீழ், சிவசக்தி காலனியில் சுமார் 3.93 ஏக்கர் பரப்பளவில் 53.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள சர்வதேச தரத்திலான கொளத்தூர் வண்ண மீன்கள் வர்த்தக மையத்திற்கு அடிக்கல் நாட்டி, அதன் மாதிரி வடிவமைப்பினை பார்வையிட்டார். உடன் கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் கே.கோபால், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

ரெட்டேரி ஏரிக்கரையில் சுமார் 4.38 ஏக்கர் பரப்பளவில் 13.12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நுழைவாயில் அரங்கம், இணைக்கும் பாலங்கள், இயற்கை தோட்டம் மற்றும் பூங்கா, நடைபாதை, சூரிய மின்கலம் கொண்ட நிழல் இருக்கைகள், உடற்பயிற்சி கூடங்கள், குழந்தைகளுக்கான விளையாட்டு பகுதி, வாகன நிறுத்துமிடங்கள், குடிநீர் மற்றும் நவீன கழிப்பறை போன்ற அனைத்து வசதிகளுடன் மேம்படுத்தப்படவுள்ள ரெட்டேரி ஏரிக்கரை;

கொளத்தூர் ஏரிக்கரையில் சுமார் 0.4 ஏக்கர் பரப்பளவில் 6.26 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இயற்கை நடைபாதை, படகு சவாரி, குழந்தைகளுக்கான விளையாட்டு பகுதி, செயற்கை நீர்வீழ்ச்சி, இசை பூங்கா, ஒளிரும் மீன் சிற்பங்கள், குடிநீர் மற்றும் நவீன கழிப்பறை போன்ற அனைத்து வசதிகளுடன் மேம்படுத்தப்படவுள்ள கொளத்தூர் ஏரிக்கரை;

என மொத்தம் 115.58 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 6 புதிய திட்டப் பணிகளுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

முடிவுற்ற பணிகளை திறந்து வைத்தல்

கொளத்தூர், நேர்மை நகரில் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை சார்பில் 2.50 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மண்டல உதவி ஆணையாளர் அலுவலகம், கொளத்தூர், ஜி.கே.எம் காலனி, ஜம்புலிங்கம் தெருவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள வட்டாட்சியர் அலுவலகம், அயனாவரம், சி.கே. சாலையில் 2.27 கோடி ரூபாய் செலவில் நவீன சலவைக் கூடம் மற்றும் 45 இலட்சம் ரூபாய் செலவில் 3 நியாய விலைக் கடைகள்;

என மொத்தம் 5.22 கோடி செலவில் முடிவுற்றப் பணிகளை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, மீன்வளம் மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், டாக்டர் கலாநிதி வீராசாமி, கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.சுதர்சனம், தாயகம் கவி, வெற்றியழகன், ஆர்.மூர்த்தி, ஜே. ஜே.எபினேசர், ஆர்.டி.சேகர், ஜோசப் சாமுவேல், துணை மேயர் மு.மகேஷ் குமார், தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு வாரியத் தலைவர் ப.ரங்கநாதன், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் கே.கோபால், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் திருமதி பெ.அமுதா, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன் சி.எம்.டி.ஏ. முதன்மைச் செயல் அலுவலர் அ.சிவஞானம், உணவுப் பொருள் வழங்கல் துறை ஆணையர் த.மோகன், மீன்வளத் துறை ஆணையாளர் (பொ) திருமதி மகேஸ்வரி ரவிக்குமார், சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே, கண்காணிப்பு அலுவலர் மற்றும் நகர் ஊரமைப்பு இயக்கக இயக்குநர் பா.கணேசன், மத்திய வட்டார துணை ஆணையர் கே. ஜெ.பிரவீன் குமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

தமிழ்நாட்டிற்கு தொழில் முதலீடுகளை ஈர்க்க அமெரிக்காவிற்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (26.8.2024) இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், துணைச் செயலாளர் வீரபாண்டியன் ஆகியோர் சந்தித்து, பயணம் வெற்றி பெற வாழ்த்து தெரிவித்தனர்.

2026 தேர்தலில் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள

6 சட்டமன்றத் தொகுதிகளிலும் வெற்றி பெற கடினமாக உழைப்போம் !

புதுக்கோட்டை தெற்கு மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம் ! அமைச்சர் எஸ்.ரகுபதி அறிவிப்பு !

புதுக்கோட்டை, ஆக.28–

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட பொது உறுப்பினர்கள் ஆலோசனை கூட்டம் 26.8.2024 திங்கட்கிழமை அறந்தாங்கி கே.வி.எஸ். திருமண மகாலில் மாவட்ட அவை தலைவர் அ.சுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்றது.

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார்கள்.

அறந்தாங்கி நகர கழக செயலாளர் க.ராஜேந்திரன் வரவேற்புரையாற்றினார்.

இந்நிகழ்வுகளில் மாவட்ட துணைச் செயலாளர்கள் ஞான.இளங்கோவன், அடைக்கலம், ஸ்ரீதேவி அண்ணாதுரை, மாவட்டப் பொருளாளர் அபுதாஹிர், தீர்மானக்குழு உறுப்பினர் வழக்கறிஞர் சி.ராமநாதன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் அறந்தாங்கி நகராட்சி தலைவர் இரா. ஆனந்த், ஆர்.ஆர்.கே.கலைமணி, பொதுக்குழு உறுப்பினர்கள் சீனி. பழனியப்பன், கே.எம்.சுப்ரமணியன், கலைவாணி சுப்பிரமணியன், ஆர். வி.செல்வம், வீரய்யா, ஒன்றியச் செயலாளர்கள் உதயம் சண்முகம், பொன் ராமலிங்கம், வே.பொன்துரை, பொன். கணேசன், சக்தி ராமசாமி, எஸ்.எம். சீனியார், அ.அடைக்கலமணி, டி.தங்கமணி, அரு.வடிவேல், கே.எஸ்.ரவி, குமார் (எ) துரைக்கண்ணு, அழகு சிதம்பரம், இரா.கணேசன், வி.ஆர். இளையராஜா, பேரூர் கழகச் செயலாளர்கள் அ.அழகப்பன், கே.சி.சிவக்குமார், ஆ.பழனிக்குமார், நாசர் (எ) செந்தில்குமார், ஒன்றிய பெருந்தலைவர்கள் மகேஸ்வரி சண்முகநாதன், மேகலா முத்து, மற்றும் அணிகளின்

அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் தி.முத்து, ஆ.கலைச்செல்வன், பாத்திமா பீவி, தேவி, ஹரி விமலாதி, கருணாகரன், குமரேசன், இரா. மேகநாதன், கே.ஆர்.ராமசாமி, ரம்யா பாலு, அப்துல் ஹமீது, டாக்டர் சுதர்சன், சக்திவேல், முத்துக்குமார், எம்.ஜி (எ) ராமச்சந்திரன், சர்வேயர் நடேசன், இரா.தமிழ்ராசு, நசுருதீன், அருண் சேகர், முகம்மது ரபீக், இளையராஜா, சரிகா மேகநாதன், பாக்கியலட்சுமி கார்த்திகேயன், நஜிமுதீன், சிவ.பாலஇளங்கோ, வி.சி.செல்வம், கைகுறிச்சி செல்வம், பழனி தேவா, ஆர்ட்டிஸ்ட் முருகேசன், அண்ணாத்துரை, க.ச.த. தென்னாக, பாஸ்கர், கே.வி.சுப்பையா, கே.வி.எஸ்.ஏ.மோகன், ரெத்தினவேல், மணிமொழியன்.

மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், பொது உறுப்பினர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர். முடிவில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் த.மணிராஜன் நன்றி கூறினார்.

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தீர்மானம்.1

தலைமைக் கழக அறிவுறுத்தலின்படி புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழக பொது உறுப்பினர் கூட்டம் பொது உறுப்பினருடைய கருத்துகளை, அறிவுறைகளை மற்றும் விளக்கங்களை பெறுவதற்காக கூட்டப்பட்டது.

தீர்மானம் 2

பொது உறுப்பினர் தெரிவித்த ஆலோசனைகள், அவர்கள் அளித்த மனுக்கள், கோரிக்கைகள் இவற்றில் தேவையானவற்றை தலைமைக்கழகத்தின் கவனத்திற்கு கொண்டு சென்று உரிய முடிவு எடுப்பது என்று தீர்மானிக்கப்படுகிறது.

தீர்மானம்3

2026ல் கழக தலைவர் நிர்ணயித்த 200 என்ற இலக்கை அடைய புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள 6 சட்டமன்ற தொகுதிகளிலும் வெற்றி பெற கடினமாக உழைத்து தலைவர் தளபதியின் நல்லாட்சியில் சீர்மிகு திட்டங்களை வீடுகள் தோறும் கொண்டு செல்ல முனைப்புடன் பாடுபடுவது என தீர்மானிக்கப்படுகிறது.

தீர்மானம் 4

எதிர்வரும் கழக நிகழ்ச்சிகள் அனைத்தையும் 2026 சட்டமன்ற தேர்தல் களத்திற்கு பயன்பெறும் வகையில் நிகழ்ச்சிகள் அமைத்து சிறப்போடு செயல்படுவது என தீர்மானிக்கப்படுகிறது.

தீர்மானம் 5

234 லட்சியம் 200 நிச்சயம் இதுவே 2026ன் தாரக மந்திரம் என தொண்டர்களால் முழங்கப்படுவது என முடிவு செய்யப்பட்டது.இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

விழுப்புரம் தெற்கு மாவட்டத்தில்

ஒன்றிய - நகர - பேரூர் பொது உறுப்பினர்கள் கூட்டங்கள்!

மாவட்டப் பொறுப்பாளர் பொன்.கௌதம சிகாமணி அறிவிப்பு !

விழுப்புரம், ஆக. 28-

விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் பொன் கௌதம சிகாமணி விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:-

கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் ஆலோசனைப்படி, கழக இளைஞர் அணி செயலாளர் - இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கழகதுணைப்பொதுச் செயலாளர் - உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்களின் அறிவுரைப்படி, விழுப்புரம் (தெற்கு) மாவட்ட தி.மு.க ஒன்றிய நகர பேரூர் கழகங்களின் பொது உறுப்பினர்கள் கூட்டம் கீழ்க்காணும் அட்டவணைப்படி நடைபெறயுள்ளது.

கூட்டம் நாள், ஒன்றியம் /நகரம் / பேரூர், இடம், கூட்டத் தலைமை, கூட்ட ஏற்பாடு, சிறப்புரையாற்றுவோர் விவரம் வருமாறு:-

(28.08.2024) - காலை 09.00 மணி - திருக்கோவிலூர் நகரம் - தேவி முருகன் திருமண மண்டபம் - திருக்கோவிலூர் - டி. குணா நகர அவைத்தலைவர் - சு.கோபி கிருஷ்ணன் நகர செயலாளர் - டி.என்.

முருகன், டி.செல்வராஜ், இரா. கற்பகம்.

காலை 10.00 மணி - திருக்கோவிலூர் (கிழக்கு) - சௌபாக்யா திருமண மண்டபம் ஆவி கொளப்பாக்கம் - கு.தீனதயாளன் ஒன்றிய அவைத்தலைவர் - மு.தங்கம் ஒன்றிய செயலாளர் - டி.என்.முருகன், டி.என்.செல்வராஜ், இரா. கற்பகம்

காலை 10.00 மணி - வானூர் (கிழக்கு) - என்.பி.ஆர்.திருமண மண்டபம், திருச்சிற்றம்பலம் கூட்டுரோடு - பி.சங்கர் ஒன்றிய அவைத்தலைவர் - பி.கே.டி.முரளி ஒன்றிய செயலாளர் - செ. புஷ்பராஜ், கோ. பாஸ்கரன், ஆர்.இளங்கோவன்

காலை 10.00 மணி - கிளியனூர் - ஜி.என்.ஜெ. திருமண மண்டபம்,கிளியனூர் எஸ்.புஷ்பராஜ் ஒன்றிய அவைத்தலைவர் - கே.ஆர்.எஸ்.இராஜி ஒன்றிய செயலாளர் - செ. புஷ்பராஜ், கோ. பாஸ்கரன், சு. இளங்கோவன்

காலை 10.00 மணி - கோலியனூர் (தெற்கு) - விஷ்னு திருமண மண்டபம், பில்லூர் - கோ. தேவகிருஷ்ணன் ஒன்றிய அவைத்தலைவர் - தே.முருகவேல் ஒன்றிய செயலாளர் - இரா.இலட்சுமணன் எம்.எல்.ஏ., இரா. ஜனகராஜ், தயா.இளந்திரையன்

காலை 11.00 மணி - மணம்பூண்டி -ஓம்சக்தி ஏ.சி. மகால், அரகண்டநல்லூர் -ஏ.சக்திசிவம் ஒன்றிய அவைத்தலைவர் - அ.சா.ஏ.பிரபு ஒன்றிய செயலாளர் - டி.என். முருகன், டி.செல்வராஜ், இரா. கற்பகம்

காலை 11.00 மணி - விழுப்புரம் நகரம் - நகர தி.மு.க அலுவலகம், விழுப்புரம் - ஊ.கற்பகமூர்த்தி நகர அவைத்தலைவர் - இரா.சக்கரை நகர செயலாளர் - இரா.இலட்சுமணன் எம்.எல்.ஏ., இரா. ஜனகராஜ், தயா.இளந்திரையன், ந.பஞ்சநாதன்

காலை 12.00 மணி - அரகண்டநல்லூர் பேரூர் - கே.ஆர். திருமண மண்டபம், அரகண்ட நல்லூர் - அ.முஜிபுர் ரகுமான் பேரூர் அவைத்தலைவர் - சு.சுந்தரமூர்த்தி பேரூர் செயலாளர் - டி.என்.முருகன், டி.செல்வராஜ், இரா. கற்பகம்

மாலை 03.00 மணி - கண்டமங்கலம் (மத்திய ஒன்றியம்) - இ.ஆர்.மித்ரா மகால், பாக்கம் கூட்டு ரோடு - ஜெ.மோகன்தாஸ் ஒன்றிய அவைத்தலைவர் - கு.செல்வமணி ஒன்றிய செயலாளர் - செ. புஷ்பராஜ், கோ. பாஸ்கரன், ஆர்.எஸ்.வாசன்

காலை 10.00 மணி - வானூர் (மேற்கு) - இந்தியன் வங்கி காம்ப்ளக்ஸ், பெரும்பாக்கம் - கே.டி.குப்பன் ஒன்றிய அவைத்தலைவர் - மைதிலி இராஜேந்திரன் ஒன்றிய செயலாளர் - செ. புஷ்பராஜ், கோ. பாஸ்கரன், ஆர்.இளங்கோவன்

மாலை 03.00 மணி - கோலியனூர் (கிழக்கு) - வசந்தம் திருமண மண்டபம், கோலியனூர் - இரா. கண்ணப்பன் ஒன்றிய அவைத்தலைவர் - பி.தெய்வசிகாமணி ஒன்றிய செயலாளர் - இரா.இலட்சுமணன் எம்.எல்.ஏ., இரா. ஜனகராஜ், தயா.இளந்திரையன்

மாலை 03.00 மணி - விக்கிரவாண்டி (மேற்கு) - கலைஞர் மகால், வேம்பி மெயின் ரோடு - ஆர்.சீனுவாசன் ஒன்றிய அவைத்தலைவர் - வேம்பி ஜெ.ரவி ஒன்றிய செயலாளர் - ம.ஜெயச்சந்திரன், அன்னியூர். சிவா எம்.எல்.ஏ., ஆ. அப்துல் சலாம், ஆ.தேன்மொழி

மாலை 04.00 மணி - காணை (வடக்கு) - மகாலட்சுமி எம்.ஆர்.எஸ். திருமண மண்டபம், பனமலைப்பேட்டை - கே.நடராஜன் ஒன்றிய அவைத்தலைவர் -ஆர். முருகன் ஒன்றிய செயலாளர் - ம.ஜெயச்சந்திரன், அன்னியூர் சிவா எம். எல்.ஏ., ஆ.அப்துல் சலாம், ஆ.தேன்மொழி

மாலை 06.00 மணி - விக்கிரவாண்டி (கிழக்கு) - ராயல் திருமண மண்டபம், வெட்டுக்காடு - சு. ராஜமாணிக்கம் மாவட்டப் பிதிநிதி - ஜெய. ரவி துரை ஒன்றிய செயலாளர் - ம.ஜெயச்சந்திரன், அன்னியூர் சிவா எம்.எல்.ஏ., எம்.அப்துல் சலாம், எம். தேன்மொழி

29.08.2024 காலை 10.00 மணி - காணை (தெற்கு) - சுபஸ்ரீ திருமண மண்டபம், காணை - எம்.பழனி ஒன்றிய அவைத்தலைவர் - கல்பட்டு ஏ.ராஜா ஒன்றிய செயலாளர் - ம. ஜெயச்சந்திரன், அன்னியூர் சிவா எம்.எல்.ஏ., இரா.இலட்சுமணன் எம். எல்.ஏ., இரா.ஜனகராஜ், தயா.இளந்திரையன், ஆ. அப்துல் சலாம்

மாலை 04.00 மணி - காணை (மத்திய ஒன்றியம்) - சிவா திருமண மண்டபம், சூரப்பட்டு - எஸ்.இ.சக்கரவர்த்தி ஒன்றிய அவைத்தலைவர், ஆர்.பி.முருகன் ஒன்றிய செயலாளர் - ம.ஜெயச்சந்திரன், அன்னியூர் சிவா எம்.எல்.ஏ., ஆ.அப்துல் சலாம், ஆ.தேன்மொழி

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

கே.டி.எஸ். மணி

ஆகஸ்ட் 28 (1993)

செங்கல்பட்டு மாவட்டத்தின் தி.மு.க. முன்னோடிகளில் ஒருவர். தி.மு.க. நடத்திய பல போராட்டங்களில் பங்கு கொண்டு சிறை சென்றவர்.

செங்கல்பட்டு மாவட்டக் கழகச் செயலாளராகவும் காஞ்சிபுரம் நகர்மன்றத் தலைவராகவும் பணியாற்றியவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.